1975 ஏப்ரல் 2]

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே, தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் மன்றம் அமைக்கப்பட்ட பிறகு இதுபற்றி அரசு விரிவாகப் பரிசீலிக்கும்.

திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு: தலைவரவர்களே, கோவை நகராட்சியிலே விதிக்கின்ற வரி தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது என்று மாண்புமிகு அமைச்சரவர்களிடமிருந்து செய்தி வந்தது. கோவை நகரிலே இருக்கக்கூடிய எதிர்க்கட்சித் தலைவர்களுடைய ஆலோசனைகளைக் கணக்கிலே எடுத்துக் கொண்டு சரியான அடிப்படையில் வரிவிதிக்க அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா? அல்லது அதற்குப் பதிலாக தனி அதிகாரிகளுடைய ஆலோசனையை மட்டும்தான் கணக்கில் எடுத்துக் கொள்ளுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே, தனி அதிகாரி தருகின்ற தகவல், அனைத்துக் கட்சியினர் விடுக்கின்ற வேண்டுகோள் இவைகளை எல்லாம் பரிசீலித்துத்தான் இந்த அரசு நடவடிக்கை எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள் 613—619 நாளைய தினம் எடுத்துக் கொள்ளப்பெறும். வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் *உடுக்குறியிடப் பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

(2) தன்னிலை விளக்கம்.

உறுப்பினர் திரு என். கிட்டப்பா அனுமதி கோரல்.

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, என்னைப்பற்றி ஒரு தன்னிலை விளக்கம் அளிக்க தங்களுடைய அனுமதியைக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தாங்கள் எழுத்து மூலமாக எழுதித் தாருங்கள். நான் அதைப் பரிசீலனை செய்து என் முடிவைத் தெரிவிக்கிறேன்.

திரு. என். கிட்டப்பா: மிக்க நன்றி.

(3) உரிமைப் பிரச்னை.

முரசொலி, அலைஓசை, தினகரன் நாளேடுகள் மீது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் 184—வது விதியின் கீழ், மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஆர். மணிமாறன், திரு. கு. அ. செங்கோட்டையன் மற்றும் டாக்டர் கே. சமரசம்

[பேரவைத் தலைவர்] [1979 ஏப்ரல் 2

ஆகியோர் அவை உரிமைமீறல் குறித்த ஒரு பிரச்சனையை அவையில் எழுப்ப அனுமதி கேட்டுள்ளனர். அதற்கான அனுமதி அளிக்கப்படுகிறது. யாராவது ஒருவர் இப்பிரச்சனையை எழுப்பலாம். திரு. ஆர். மணிமாறன்.

திரு. ஆர், மணிமாறன் : பேரவைத் தலைவரவர்களே, கடந்த 26.3.1979-ம் தேதி அன்றைக்கு இந்தப் பேரவையின் நடவடிக்கைகளின்போது பல்வேறு விவாதங்கள் எழுப்பப்பட்டன. அந்த விவாதங்களின்போது மாண்புமிகு அவைத் தலைவரவர்கள் சில தீர்ப்பினை வெளியிட்டு அவைக்குறிப்பில் இந்த நிகழ்ச்சிகள் இடம் பெறக்கூடாது என்று அவையிலே தெரிவித்ததற்குப் பின்னாலும் கூட முரசொலி, அலைஓசை, தினகரன் போன்ற பத்திரிகைகள் அவைக்குறிப்பிலே இருந்து நீக்கப்பட வேண்டுமென்ற அந்த உத்தரவை, தாங்கள் அளித்த அந்த உத்தரவிற்குக் கட்டுப்படாமல், அந்தக் கட்டளையை ஏற்றுக் கொள்ளாமல் இட்டுக்கட்டி தலைப்புப்போட்டு மேற்சொன்ன பத்திரிகைகள் 26-3-79ம் தேதி அன்றைக்கு வெளியிடப்பட்ட 'அலைஓசை' பத்திரிகையிலேயும், 27-3-79-ம் நாள் வெளியிடப்பட்ட 'முரசொலி' பத்திரிகையிலேயும், 'தினகரன்' பத்திரிகையிலேயும் அவற்றை வெளியிட்டு இருப்பது அவை உரிமையை மீறிய செயல் என்று நான் கருதி இந்த உரிமைப் பிரச்னையை அந்தப் பத்திரிகைகள் மீது நான் கொண்டு வந்து இருக்கிறேன் என்பதை நான் பணிவோடு தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். நீண்ட பாரம்பரியத்திற்குச் சொந்தமாக்கப்பட்ட இந்த அவையின் மரபுகளை உடைத்து எறிகின்ற அளவிலே அவைக்கு மாசு கற்பிக்க வேண்டுமென்று குறுகிய எல்லைக் கோட்டுக்குள்ளே நின்று கொண்டு இத்தகைய செய்திகளைப் பிரசுரிப்பதைக் காண்கின்றபோது பத்திரிகை தர்மத்தின் குரல் வளையை நெறிப்பதாகக் கருதுவதால்தான் நான் இந்த உரிமை மீறல் பிரச்சனையை இன்றைக்குக் கொண்டு வந்து இருக்கிறேன் என்பதை மாண்புமிகு அவைத்தலைவராகிய உங்கள் முன்னால் இந்த மாமன்றத்திலே நான் தெள்ளத் தெளிவாக எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். பாரம்பரியம் மிக்க இந்த சபையை மாசுபடுத்துவதாக அந்தப் பத்திரிகைகளின் நடவடிக்கை இருக்கிறது....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவை உரிமை மீறல் பிரச்சனை என்ன என்பதை மட்டும் சுருக்கமாகச் சொல்லிவிட்டு அமருங்கள், மற்றவைகளைப்பற்றி நீங்கள் விளக்கத் தேவை இல்லை,

1979 ஏப்ரல் 2]

திரு. ஆர். மணிமாறன் ; தாங்கள் அந்த வார்த்தைகள் அவைக் குறிப்பில் இடம பெறக்கூடாது என்று தீர்ப்பளித்திருக்கிறீர்கள். அதற்குப் பின்னாலும் அந்த நிகழ்ச்சியை * * * என்று தலைப்பிட்டு அலை ஓசை பத்திரிகையிலும், முரசொலி பத்திரிகையிலும், தினகரன் பத்திரிகையிலும் அந்தச் செய்தியை வெளியிட்டிருக்கிறார்கள்.

தாங்கள் தீர்ப்பளித்திருக்கிறீர்கள். இருந்தாலும் கூட அதை பிரசுரித்து இருப்பது அவை உரிமையை மீறிய செயலாகும். ஆகவே, இதை உரிமைக் குழுவிற்கு விட வேண்டுமென்று தங்களை தாழ்பணிந்து கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஆ. நடராசன் : சார், பாயின்ட் ஆப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 'சீரோ அவரில்' பாயின்ட் ஆப் ஆர்டர் முன்வரிசையில் இருக்கக்கூடிய கட்சித் தலைவர்கள்தான் கேட்கலாம் என்ற மரபை ஏற்படுத்தியிருக்கிறோம். தயவுசெய்து நீங்கள் உட்காருங்கள்.

திரு. மணிமாறன் அவர்கள் பேசும்போது * * என்று சொன்னதை நீக்கிவிடும்படி உத்தரவிடுகிறேன்.

இங்கே எழுப்பப்பட்டிருக்கிற பிரச்சனை பத்திரிகைகளைப் பற்றியதாக இருப்பதால், சம்பந்தப்பட்ட பத்திரிகைகளிடம் விளக்கம் கேட்டு, பின்னால் என்னுடைய தீர்ப்பை அளிக்கிறேன்.

(4) ஒழுங்குப் பிரச்னை.

உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிப்புகளை எடுத்துக் கொள்ளாதது குறித்து:

திரு. ஜே. ஜேம்ஸ் : சார், பாயின்ட் ஆப் ஆர்டர். தலைவரவர்களே, நான் மாண்புமிகு முதலமைச்சர் மீது கொண்டு வந்திருக்கிற உரிமைப் பிரச்சனையை தாங்கள் இன்று எடுத்துக் கொள்வதாகச் சொன்னீர்கள். ஆனால் இன்றைக்கும் எடுத்துக் கொள்ளப்படவில்லை. . ...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்னுடைய அறையிலேயே தங்களுக்கு நிலைமையை விளக்கினேன். அதை ஏற்றுக் கொள்வீர்கள் என்று நம்பினேன். ஆனால் நீங்கள் மீண்டும் அதைப்பற்றி அவையிலே எழுப்புகிறீர்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு உடல்நிலை சரியில்லை.

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.